FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319469

1. District : Madurai மாவட்டம் PS: V F A C காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 7/2026 முத.அ. எண் Date: 23-06-2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988
(ii) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: as amended by PC (amend
(iii) Act சட்டம்: (amendment) Act 2018 and BNSS Act Sections பிரிவுகள்: ment) Act 2018 and 106 BNSS Act.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22-6-2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.30 hrs Time to : 22.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 16.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23-06-2026 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 17.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23-06-2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 52 km, தென்மேற்கு
Beat Number : (b) Address : ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேலப்பட்டி
முறைக் காவல் எண் முகவரி மதுரை மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ ~~Husband's~~ Name : படித்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. P. தனலெட்சுமி தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : வயது 54 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தூய்மை அப் அக (g) Address :
தொழில் கூடு அலுவலர் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.அ.ராஜா, மாவட்ட வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மேலப்பட்டி ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம் மற்றும் 5 மேற்கண்ட நபர்கள் (இணைப்பு) இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— 23-06-26 1400 PT

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு I)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.6.20

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Bharathi Priya 23-6-26
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 23-06-26 19.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண்
V & AC, Madurai

இணைப்பு - I

குற்றவாளிகள்

A-2 திரு. E. அஜித்குமார், 32/2026,
த/பெ. ஈஸ்வரன்,
15th CFC BP Computer Operator,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகம்,
சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம் (தனிநபர்)

A-3 திருமதி. செ. ஜீவா, வயது 48/2026,
த/பெ. செல்லையா,
மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்

A-4 திரு. சுந்தரபாண்டி, வயது 49/2026,
த/பெ. மகாலிங்கம்,
ஊராட்சி செயலர்,
ஆத்தங்கரைபட்டி மற்றும் உத்தப்புரம்,
சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்

A-5 திரு. சின்னச்சாமி, வயது 54/2026,
த/பெ. பெ. பாண்டியன்,
ஊராட்சி செயலர்,
E. கோட்டைபட்டி,
சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்

A-6 திரு. ஜெயசந்திரன், வயது 55/2026,
த/பெ. இளையராஜா,
பெருங்காமநல்லூர்,
பேரையூர் தாலுகா, மதுரை (தனிநபர்)

23.6.26

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை

இணைப்பு - II

Honoured Sir,

Submitted,

இன்று 23.06.2026-ம் தேதி மாலை 16:00 மணிக்கு, காவல் ஆய்வாளர் நீ. பாரதிபிரியா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. P. ஜெயஷர்மிளா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 22.06.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.76,000/-, கைப்பற்றப்பட்ட 6 பதிவேடுகள், பணப்பரிமாற்றம் விபரம் அடங்கிய கணினி பிரிண்ட்அவுட் 2 மற்றும் மேற்படி அலுவலகத்தில் அலுவலில் இருந்த ஐந்து அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் ஜெயசந்திரன், அஜித்குமார், மகேஸ்வரன் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் P. ஜெயஷர்மிளா, துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 21 / 2026 / I1, நாள் : 23.06.2026 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - ஊரக வளர்ச்சி துறை - சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அலவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிராம ஊராட்சி) பணியாற்றும் திரு. அ.ராஜா அவர்கள் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம பஞ்சாயத்து செயலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோரிடமிருந்து, BDO ராஜா அவர்களது அலுவலகத்தில் Data Entry Operator-ஆக பணிபுரியும் திரு. அஜித்குமார் உதவியுடன் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 22.06.2026-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.76,000/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 22.06.2026-ம் தேதியன்று, மதுரை மாவட்டம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அலவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிராம ஊராட்சி) பணியாற்றும் திரு.அ.ராஜா அவர்கள் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) மதுரை தெற்கு அவர்களின் மாதாந்திர ஆய்வுக்கூட்டத்திற்கு வரும் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம பஞ்சாயத்து செயலர்கள் மற்றும்

ஒப்பந்ததாரர்கள் ஆகியோரிடமிருந்து, BDO ராஜா அவர்களது அலுவலகத்தில் Data Entry Operator-ஆக பணிபுரியும் திரு. அஜித்குமார் உதவியுடன் லஞ்சம் வாங்குவதாகவும், அவ்வாறு பெற்ற லஞ்சப்பணத்தை அஜித்குமாரின் G-pay App மூலமாக BDO ராஜா, அவரது மனைவி, மகன் மற்றும் அவரது சகோதரர் பெயரில் உள்ள வங்கி கணக்குகளில் அப்பணத்தினை அனுப்பி வைப்பதாக கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. பாரதிபிரியா அவர்கள் காலை சுமார் 11:00 மணிக்கு என்னிடம் தெரிவித்தார்கள். பின்னர், அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து அதனை உறுதி செய்துவிட்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்து, மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு மதியம் 12:30 மணிக்கு வந்தேன். பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திருமதி. பாரதிபிரியா, திரு.ரமேஷ்பிரபு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (22.06.2026) மதியம் சுமார் 12:45 மணிக்கு அரசு காவல் வாகனம் TN 22 G 7007-ல் மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைந்துள்ள சேடப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே மதியம் சுமார் 14:15 மணிக்கு வந்து, மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக காம்பவுண்டு வெளியே வடக்கு பக்கம் உள்ள டீக்கடை மற்றும் மேற்படி அலுவலகத்திற்கு எதிரே உள்ள கடைகளின் அருகே நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில், மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) மதுரை தெற்கு திரு. சுரேஷ் அவர்கள் நடத்திய கூட்டம் காலை சுமார் 11:00 மணிக்கு ஆரம்பித்து மதியம் சுமார் 14:00 மணி வரை நடை பெற்றதாகவும், அக்கூட்டத்திற்கு வந்திருந்த பஞ்சாயத்து செயலர்கள் மற்றும் சில ஒப்பந்ததாரர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு. ராஜா மற்றும் அவரது பணிகளை கவனிக்கும் Data Entry Operator திரு. அஜித்குமார் ஆகியோரை சந்தித்து லஞ்சப்பணத்தை ரொக்கமாக கொடுத்ததும், G-pay மூலமும் அனுப்பி வைத்ததும் தெரியவந்தது. அதன்பேரில் நேற்று (22.06.2026) மதியம் சுமார் 15:30 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள பேரையூரிலிருந்து உசிலம்பட்டி நோக்கி தென் வடலாக செல்லும் மெயின் ரோட்டின் கிழக்குபக்கம் மேற்கு திசை நோக்கியவாறு அமைந்த மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தெற்கு பகுதியில் இருந்த, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ.) அறை நோக்கி சென்ற போது, அவரது அலுவலக அறை வாசலில் கையில் M-Book மற்றும் கோப்புகளுடன் நின்றிருந்த நபரையும் உள்ளே அழைத்து சென்று, அந்த அலுவலக அறையில் இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த அலுவலரிடம் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திருமதி. பாரதிபிரியா, திரு. ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ்

பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்த பின்னர், அவரது அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்த போது, அந்த நபர் சற்று பதட்டத்துடன் தனது இருக்கையை விட்டு எழுந்து நின்று, அவரது பெயர் அ.ராஜா என்றும், அவர் மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கடந்த 22.10.2025-ம் தேதி முதல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்து, காலை 11:00 மணி முதல் மதியம் 14:00 மணி வரை உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) மதுரை தெற்கு அவர்களின் மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றதாகவும், அக்கூட்டத்தில் கிராம ஊராட்சி செயலர்கள் கலந்து கொண்டதாகவும், அதன்பின்னர், அவர்கள் அவரை வந்து சந்தித்து விட்டு சென்றதாகவும், தற்போது அவரை சந்திக்க பெருங்காமநல்லூர் முன்னாள் சேர்மன் திரு. ஜெயசந்திரன் அவர்கள் அவரது மனைவி ஜெயபாரதி பெயரில் MGNREG Scheme திட்டத்தில் பணிகள் முடித்து அது சம்பந்தமாக நிலுவை தொகை பெறுவது பற்றி அவரை சந்தித்து பேசி கொண்டிருப்பதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து, திரு. ராஜா அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த ஜெயசந்திரன் என்பவரை விசாரணை செய்த போது, அவர் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய முன்னாள் சேர்மன் என்றும், அவரது மனைவி ஜெயபாரதி பெயரில், கடந்த 2024-2025 மற்றும் 2025-2026 ஆம் நிதி ஆண்டில் MGNREGS திட்டத்தின் கீழ் பெருங்காமநல்லூர் ராமன் வீடு அருகே சிறு பாலம் அமைத்த பணி மற்றும் பேவர் பிளாக் ரோடு அமைத்தது சம்பந்தமான நிலுவை தொகை பெறுவது சம்பந்தமாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திரு. ராஜா அவர்களை சந்தித்து பேச வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டு பார்த்ததில், அவரது சட்டையின் மேல் பாக்கெட்டில் **ரூ.21,000/- (ரூ.500/- X 42)** வைத்திருப்பதாக கூறி அதனை எடுத்து ஆஜர் செய்தார். அந்தப்பணம் குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, அவர் தனியாக இருந்த **ரூ.500/- (ரூ.500/- X 1)** தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாகவும், மீதப்பணம் குறித்து கேட்கையில் அதற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி மீதப்பணம் **ரூ.20,500/- (ரூ.500/- X 41)** திரு. ராஜா அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கும் லஞ்சப்பணம் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்படி அலுவலக அறை முன்பு M-Book மற்றும் கோப்புகளுடன் நின்றிருந்து அழைத்து வரப்பட்ட நபரின் பெயர் விபரம் கேட்க, அவரது பெயர் மகேஸ்வரன் என்றும், அவரது தந்தை சுந்தரேஸ்வரன் ஒப்பந்தகாரர் என்றும், அவரது தந்தை அதிகாரிபட்டி பஞ்சாயத்து பகுதிகளில் 2024-2025 மற்றும் 2025-2026 நிதி ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிந்தவற்றின் M-Book களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. ராஜ்மோகன் அவர்களிடம் கொடுத்து விபரம் தெரிவிப்பதற்காக வந்ததாக தெரிவித்தார். எனவே, காவல் ஆய்வாளர் திரு. ரமேஷ்பிரபு அவர்களின் உதவியுடன் மேற்படி

M-Book களை பார்வையிட்டத்தில், (1) 2024-2025 நிதி ஆண்டுக்கான ஜம்புளாபுரம் AD காலனி WBM ரோடு M-Book 326/25-26, (2) 2024-2025 நிதி ஆண்டுக்கான அதிகாரிபட்டி வாகைகுளம் WBM ரோடு M-Book 654/25-26, (3) 2025-2026 நிதி ஆண்டுக்கான அதிகாரிபட்டி வாகைகுளம் பேவர் பிளாக் ரோடு M-Book 520/25-26, (4) 2025-2026 நிதி ஆண்டுக்கான அதிகாரிபட்டி Minor Bridge M-Book 524/25-26, (5) 2025-2026 நிதி ஆண்டுக்கான அதிகாரிபட்டி A கிருஷ்ணாபுரம் பேவர் பிளாக் ரோடு M-Book 538/25-26 மற்றும் (6) 2025-2026 நிதி ஆண்டுக்கான அதிகாரிபட்டி காந்தி தெரு பேவர் பிளாக் ரோடு M-Book 529/25-26 ஆகியன காணப்பட்டது. அது குறித்து மேற்படி மகேஸ்வரன் அவர்களிடம் கேட்க, அவரது தந்தை சுந்தரேஸ்வரன் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருந்ததால், அவர் மேற்படி புத்தகங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. ராஜ்மோகன் அவர்களிடம் கொடுத்து விபரம் தெரிவிக்க வந்ததாக தெரிவித்தார். அப்போது, நான் மேற்படி மகேஸ்வரன் அவர்களிடம் அரசு பதிவேடுகளான M-Book தங்களிடம் எப்படி வந்தது என கேட்க, அவரது தந்தை கொடுத்து அனுப்பி வைத்ததாக அவர் தெரிவித்தார். மேலும், அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டு பார்த்ததில், அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.350/- வைத்திருப்பதாக கூறி அதனை எடுத்து ஆஜர் செய்து அது அவரது சொந்தப்பணம் என்று அவர் தெரிவித்ததால் அந்தப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி கூறப்பட்டது. அதன்பின்னர், திரு. ராஜா அவர்களிடம் அவரது அலுவலக Data Entry Operator திரு. அஜித்குமார் அவர்கள் குறித்து கேட்ட போது, Data Entry Operator திரு. அஜித்குமாரின் அறையானது தனது அலுவலக அறையின் கிழக்கு பக்கத்தில் உள்ள கதவு வழியாக செல்லும் பாதையில் உள்ளதாக தெரிவித்து, அஜித்குமாரின் அறையை காண்பித்தார். மேற்படி Data Entry Operator அறையில் தெற்கு திசை நோக்கி கணினியின் முன்னால் இருந்த இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த நபரிடம் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு ஆய்வாளர்களையும் அறிமுகம் செய்து கொண்டு சோதனையின் விபரம் தெரிவித்து, அவரை விசாரித்த போது, அவரது பெயர் அஜித்குமார் என்றும், Data Entry Operator ஆக கடந்த 01.04.2021-ம் தேதி முதல் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, அவரை சோதனையிட்ட போது, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.34,300/- வைத்திருப்பதாக கூறி பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்ட போது, மேற்படி பணம் ரூ.34,300/-ல் ரூ.19,300/- (ரூ.500/- X 38, ரூ.100/- X 3) ஆனது நேற்று (22.06.2026) அலுவலகத்தில் வந்து அவரை சந்தித்த தாடையம்பட்டி ஒப்பந்தகாரர் திரு. சின்ன முனியாண்டி என்பவர் BDO ராஜா அவர்கள் கேட்டதாக சொல்லி அவரிடம் கொடுத்து ராஜாவிடம் கொடுக்குமாறு சொல்லி கொடுத்த பணம் என்றும், மேலும், ரூ.15,000/- (ரூ.500/- X 20,

ரூ.100/- **X 50)** ஆனது நேற்று (22.06.2026) அலுவலகத்தில் வந்து அவரை சந்தித்து ஊராட்சி செயலாளர்கள் திரு. ராஜாவிடம் கொடுக்க சொல்லி கொடுத்த பணம் என்றும், அவற்றை தான் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திரு. ராஜா அவர்களுக்காக வாங்கி, அதனை அலுவலக வேலை முடிந்து செல்லும் போது அவரிடம் கொடுப்பதற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி மொத்தம் பணம் **ரூ.34,300/- (ரூ.500/- X 58, ரூ.100/- X 53)** கைப்பற்றப்பட்டது. அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் இருந்த ரூ.1,200/-யை எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்த செலவிற்காக வைத்துள்ள பணம் எனக்கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணத்தை அவரே வைத்துக்கொள்ளும்படி கூறப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மேற்படி Data Entry Operator அறையை சோதனையிட்ட போது, மேற்படி அறையின் தெற்கு பக்க சுவரை ஒட்டி உள்ள தென்மேற்கு மூலையில் வைக்கப்பட்டுள்ள பிரிண்டர் பின்புறம் சுவரை ஒட்டி ரூ.500/- பணக்கத்தை காணப்பட்டது. அதனை எண்ணிப்பார்த்த போது, ரூ.6,000/- (ரூ.500/- X 12) இருந்தது. அந்தப்பணம் குறித்து, திரு. அஜித்குமார் அவர்களிடம் கேட்ட போது, அந்தப்பணம் எப்படி அங்கு வந்தது என தெரியாது கூறி, மேலும், அவருடன் அந்த Data Entry Operator அறையில் திரு. புனுகு கருப்பயா என்பவரும் Data Entry Operator ஆக பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவர் குறித்து கேட்ட போது, அவர் அலுவலகத்தில் பணியில் இருப்பதாகவும், தற்போது வெளியில் டீ குடிக்க சென்றுள்ளதாக தெரிவித்தார். எனவே, மேற்படி **அநாமதேய பணம் ரூ.6,000/- (ரூ.500/- X 12)** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், சந்தேகத்தின் மேற்படி அஜித்குமாரின் செல்போன் எண் 82204 08544 -ல் உள்ள Gpay Application-யை ஆய்வு செய்த போது, இன்று மதியம் சுமார் 03:07 மணிக்கு ரூ.5,000/-மும், மேலும், மதியம் 02:05 மணிக்கு ரூ.10,000/-மும் அவரது எண்ணுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதைப்பற்றி திரு. அஜித்குமாரிடம் விசாரித்த போது, ரூ.5,000/-த்தை பெரிய கட்டளை செயலாளர் திரு. சின்னச்சாமி அவர்களும், ரூ.10,000/-த்தை சூலப்புரம் ஊராட்சி செயலாளர் திரு. முருகன் அவர்களும், BDO திரு. ராஜாவுக்கு கொடுப்பதற்காக தனது எண்ணில் அனுப்பி வைத்துள்ளதாகவும் அதனை பிறகு அவர் தனது வங்கி கணக்கிலிருந்து அப்பணத்தை எடுத்து BDO ராஜா அவர்களுக்கு தான் வழக்கம் போல் ஒப்படைப்பேன் என்றும் தெரிவித்தார். மேலும், திரு. அஜித்குமார் அவர்களின் WhatsApp செயலியை ஆய்வு செய்த போது, அவரது SBI வங்கி கணக்கு எண். 33503347255 என்ற எண்ணிலிருந்து BDO திரு. ராஜா அவர்களின் SBI வங்கி கணக்கு எண். 30259172620 என்ற எண்ணிற்கு கடந்த 13.04.2026-ம் தேதியன்று ரூ.1,00,000/-மும், 17.04.2026-ம் தேதியன்று ரூ.1,50,000/-மும், 20.04.2026-ம் தேதியன்று ரூ.1,00,000/-மும், 24.04.2026-ம் தேதியன்று ரூ.90,000/-மும், 30.04.2026-ம் தேதியன்று

ரூ.1,60,000/-மும், 01.05.2026-ம் தேதியன்று ரூ.45,000/-மும் ஆக மொத்தம் ரூ.6,45,000/- அனுப்பப்பட்டதாக காணப்பட்டது. மேலும், திரு. அஜித்குமார் அவர்களின் SBI வங்கி கணக்கிலிருந்து BDO திரு. ராஜா அவர்களின் ICICI வங்கி கணக்கிற்கு கடந்த 11.05.2026-ம் தேதியன்று ரூ.1,50,000/-மும், 16.05.2026-ம் தேதியன்று ரூ.1,53,000/-மும், 26.05.2026-ம் தேதியன்று ரூ.55,000/-மும், 29.05.2026-ம் தேதியன்று ரூ.50,000/-மும் என மொத்தம் ரூ.4,08,000/-ம் அனுப்பப்பட்டதாக காணப்பட்டது. மேலும், திரு. அஜித்குமார் அவர்களின் SBI வங்கி கணக்கிலிருந்து BDO திரு. ராஜா அவர்களின் மகன் ஷான் எர்வின் அவர்களின் வங்கி கணக்கிற்கு கடந்த 10.06.2026-ம் தேதியன்று ரூ.4,30,400/-மும், BDO திரு. ராஜா அவர்களின் மனைவி திருமதி. மெர்ஸி வென்சம் அவர்களின் வங்கி கணக்கிற்கு கடந்த 17.06.2026-ம் தேதியன்று ரூ.3,13,500/-ம், BDO திரு. ராஜா அவர்களின் தம்பி திரு.ராபின்சன் அவர்களின் வங்கி கணக்கிற்கு கடந்த 21.05.2026-ம் தேதியன்று ரூ.2,50,000/-ம் என ஆக மொத்தத்தில் திரு. அஜித்குமார் அவர்களின் வங்கி கணக்கிலிருந்து ரூ.20,46,900/- அனுப்பப்பட்டதாக காணப்பட்டது. அப்பணப்பரிமாற்றம் குறித்து, திரு. அஜித் குமார் அவர்களிடம் கேட்ட போது BDO திரு. ராஜா அவர்கள் ஒப்பந்தகாரர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர் களிடமிருந்து பெற்ற பணத்தை அவரிடம் கொடுத்து அதனை திரு. ராஜா அவர்களின் வங்கி கணக்கிற்கும், மேலும், அவரது மனைவி, மகன் மற்றும் அவரது தம்பி ஆகியோரின் வங்கி கணக்குகளுக்கும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டதால் தான் அதனை அனுப்பி வைத்ததாகவும் தெரிவித்தார். அந்த அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. அந்த சமயத்தில் திரு. புனுகு கருப்பையா என்பவர் மேற்படி அஜித்குமார் அறைக்கு வந்தார். அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு விசாரித்த போது, அவர் அஜித்குமரின் கூற்றை ஒத்து கூறி, அவர் மேற்படி அலுவலகத்தில் தற்காலிக ஊழியராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் டீ குடிக்க வெளியே சென்றுவிட்டு வந்ததாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதும் இல்லை. மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றி அலுவலகத்தில் அலுவலக வளாகத்தில் மேற்கு நோக்கி அமைந்த மைய கட்டடத்தின் போர்ட்டிகோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திரு. ராஜா அவர்கள் பயன்படுத்தும் அரசு வாகனம் TN 58 G 0243 Bolero மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ. ஊ) திரு. சங்கர் கைலாசம் அவர்கள் பயன்படுத்தும் அரசு வாகனம் TN 58 G 0267 Bolero ஆகியன நிறுத்தப்பட்டு இருந்தது. அவற்றில், திரு. ராஜா அவர்கள் பயன்படுத்தும் அரசு வாகனம் TN 58 G 0243 Bolero-வை அவர் முன்னிலையில் சோதனையிடப்பட்டதில் சந்தேகப்படும் படியான பொருட்கள் ஏதும் காணப்படவில்லை. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ. ஊ) திரு. சங்கர் கைலாசம் கடந்த நான்கு நாட்களாக விடுமுறையில் இருந்து வருவதாக திரு. ராஜா அவர்கள் தெரிவித்தார். மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள அனைத்து

அலுவலக அறைகளும் சோதனையிடப்பட்டது. சோதனையின் போது, மேற்படி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அறையில் காணப்பட்ட அலுவலர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு சோதனை விபரம் தெரிவித்து விசாரணை செய்த போது, மேற்படி கூட்ட அறையில் அமர்ந்திருந்த அலுவலர்களில் பெண் அலுவலர் திருமதி. ஜீவா அவர்கள் சேடப்பட்டி மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக அவர் பணிபுரிந்து வருவதாகவும், தற்போது அவருடன் இன்று மாதாந்திர ஆய்வுக் கூட்டத்திற்கு வந்திருந்த ஆத்தங்கரைப்பட்டி ஊராட்சி செயலாளர் திரு. சுந்தரபாண்டி மற்றும் இ.கோட்டைப்பட்டி ஊராட்சி செயலாளர் திரு. சின்னசாமி ஆகியோர் உடன் இருந்து MGNREGS சமப்பந்தமான கோப்புகளை காண்பித்து விபரம் கேட்டு தெரிந்து கொண்டிருப்பதாகவும் கூறி, அலுவலக சோதனைக்கு சம்மதம் தெரிவித்தார். பிறகு, திருமதி. ஜீவா அவர்களை காவல் ஆய்வாளர் திருமதி. பாரதிபிரியா அவர்கள் சோதனையிட்ட போது, அவரது மணிபர்ஸலிருந்து ரூ.1,600/-யை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. அதன் காரணமாக மேற்படி பணம் **ரூ.1,600/- (ரூ.500/- X 3, ரூ.100/- X 1)** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், திருமதி. ஜீவா அவர்களுடன் பணியிலிருந்த ஆத்தங்கரைப்பட்டி ஊராட்சி செயலாளர் திரு. சுந்தர பாண்டி அவர்களை சோதனையிட்டதில், அவர், அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.5,900/-யை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. அதன் காரணமாக மேற்படி பணம் **ரூ.5,900/- (ரூ.500/- X 5, ரூ.200/- X 17)** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து, திருமதி. ஜீவா அவர்களுடன் பணியிலிருந்த மற்றொரு நபரான இ.கோட்டைபட்டி ஊராட்சி செயலாளர் திரு. சின்னச்சாமி அவர்களை சோதனையிட்டதில், அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.7,700/-யை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், மேற்படி பணம் **ரூ.7,700/- (ரூ.500/- X 15, ரூ.200/- X 1)** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. அஜித்குமார் தெரிவித்த தகவல்களின் பேரில், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு. அ. ராஜா அவர்களை விசாரணை செய்ததில், அஜித்குமார் மற்றும் அவரது அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.40,300/-யை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், மேலும், அஜித்குமாரிடமிருந்து அவரது வங்கி கணக்கிற்கும், அவரது மனைவி , அவரது மகன் மற்றும் அவரது சகோதரர் வங்கி கணக்குகளில் மொத்தம் ரூ.20,40,900/- பெற்றதாகவும் அதற்காக அவர் அஜித்குமாருக்கு 3 சதவிகிதம் வட்டி கொடுக்க இருப்பதாகவும், அப்பணத்தை அவரது GPF பணத்திலிருந்து Partfinal எடுத்து கடன் அடைத்து விடப்போவதாகவும், மேலும் அவர் அவரது அலுவலகத்தில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்கள் பல மாதங்களாக இயங்கவில்லை என்றும், அது வட்டார

வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் பொறுப்பில் உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், திரு. அஜித்குமார் அவர்களின் செல்போன் எண். 82204 08544-லிருந்து மடிக்கணினி மூலமாக மேற்படி பணப் பரிவர்த்தனை குறித்த விபரங்களை ஸ்கீரின் சாட் மூலமாக பிரிண்ட் எடுத்து பக்கம் 1 முதல் 16 வரை உள்ள விபரங்கள் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து, திரு. அ. ராஜா அவர்களின் செல்போன் எண். 97904 24886-லிருந்து மடிக்கணினி மூலமாக மேற்படி பணப்பரிவர்த்தனை குறித்த விபரங்களை ஸ்கீரின் சாட் மூலமாக பிரிண்ட் எடுத்து பக்கம் 1 முதல் 5 வரை உள்ள விபரங்கள் விசாரணைக்காக கைப்பற்றப் பட்டது. மேற்படி இரண்டு பிரிண்ட் அவுட்களில், Data Entry Operator திரு. அஜித்குமார், BDO திரு. ராஜா, நான் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி. பாரதிபிரியா ஆகியோரால் கையொப்பமிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திரு. ராஜா அவர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில், பின்வரும் பதிவேடுகளை அவர் ஆஜர் செய்தார். அவைகள் : (1) சேடபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் -பிரிவு தி5 சுருக்கப்பதிவேடு - வருடம் 2026 (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 22 வரை), (2) சேடபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் -பிரிவு தி5 அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு - வருடம் 2026 - திட்டப்பிரிவு (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 6 வரை), (3) சேடபட்டி ஊராட்சி ஒன்றியம் ஆய்வு கூட்டம் பதிவேடு 2026-2027 (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 17 வரை), (4) சேடபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பிரிவு தி5 களப் பணியாளர்கள் வருகை பதிவேடு - வருடம் 2026 (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 6 வரை), (5) சேடபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பிரிவு தி5 - தாமத வருகை பதிவேடு - வருடம் 2026 (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 18 வரை) மற்றும் (6) ஊராட்சி ஒன்றிய அலுவலகம் - கணினி உதவியாளர்கள் வருகை பதிவேடு (எழுதப்பட்ட பக்கங்கள் 1 முதல் 19 வரை). மேற்படி திடீர் இணை ஆய்வு நிகழ்வுகள் சம்பந்தமாக வட்டார வளாச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு. ராஜா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. ராஜ்மோகன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. ஜீவா, ஆத்தங்கரைப்பட்டி, உத்தப்புரம் ஊராட்சி செயலர் திரு. சுந்தரபாண்டி, இ.கோட்டைபட்டி ஊராட்சி செயலர் திரு. சின்னச்சாமி, பெருங்காமநல்லூர் திரு. ஜெயசந்திரன், Data Entry Operator திரு. அஜித்குமார் மற்றும் தனிநபர் திரு. மகேஸ்வரன் ஆகியோரது எழுத்து பூர்வமான வாக்குமூலங்களை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் பதிவு செய்தேன். மேற்சொன்ன பதிவேடுகள், பணப்பரிமாற்றம் குறித்த பிரிண்ட் அவுட்கள் மற்றும் திடீர் இணை ஆய்வின் போது, லஞ்சப்பணம் மற்றும் தகுந்த முகாந்திரம் கூறாமல் சந்தேகப்படும்படி வைத்திருந்த பணம் மற்றும் அநாமதேயப்பணம் என மொத்தம் ரூ.76,000/-ம் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் தனிநபர் பணியிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், கொடிநாள் பணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திரு. ராஜா அவர்கள்

தெரிவித்தார். அதற்கான ஆவணங்கள் அலுவலகத்தில் எதுவும் கிடையாது என்றும் தெரிவித்தார். மேற்படி திடீர் இணை ஆய்வு சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட குறிப்புரை 22.06.2026-ஆம் தேதி மதியம் 15:30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 22:30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்குறிப்புரையின் நகல் ஒன்று திரு. அ. ராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்கான அவரது ஒப்பம் பெறப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.76,000/- ஆகியவற்றை இணைத்து (1) திரு. அ. ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ), சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம், (2) திரு. அஜித்குமார், 15th CFC BP Computer Operator, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம் (தனிநபர்), (3) திருமதி. ஜீவா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம், (4) திரு. சுந்தரபாண்டி, ஊராட்சி செயலர், ஆத்தங்கரைபட்டி மற்றும் உத்தப்புரம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம், (5) திரு. சின்னச்சாமி, ஊராட்சி செயலர், E. கோட்டைபட்டி, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம் மற்றும் (6) திரு. ஜெயசந்திரன், வயது 55/2026, த/பெ. இளையராஜா, பெருங்காமநல்லூர், பேரையூர், மதுரை (தனிநபர்) ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/-XXXXXX (P. ஜெயஷர்மிளா) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை (23.06.2026) இணைப்பு :1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 22.06.2026, 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.76,000/-, 3) சேடப்பட்டி வட்டார வளாச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள், 4) ஐந்து அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் திரு. அஜித்குமார், திரு.ஜெயசந்திரன் மற்றும் திரு. மகேஸ்வரன் ஆகியோரது வாக்குமூலங்கள்

Sir, Received this report today (23.06.2026) at 16:00 hrs along with Joint Surprise Check Proceedings, dated 22.06.2026, Cash Rs. 76,000/-, Eight statements and Seized 6 Registers & 2 Printout documents. After obtaining permission from the Superior Officers, I Registered a case in Madurai V&AC Crime No.07/2026 u/s 7, 7A of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 106 BNSS Act on 23.06.2026 at 17:00 hrs. Sd/- XXXXX 23.06.2026 [N. Bharathipriya] Inspector, V&AC, Madurai.

The original FIR along with report dated : 23.06.2026 of Tmt. P. Jeyasharmila, Joint Surprise Check Proceedings Dated : 22.06.2026, Statements of officials (5), Statements of Private Individuals (3) are submitted to the Hon'ble Principal District Judge, Principal District and Sessions Court, Madurai and other copies were sent to the officers concerned.

23-6-2026

(N. BHARATHIPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai
(23.06.2026)